**மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**கும்முடிப்பூண்டி**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண்: C.C. 133/2025 | காவல் நிலையம்: கும்மிடிப்பூண்டி | | |
| பெயர் : சரவணன் | அ.சா. 4 | நாள் : 03.11.2025 | |

அரசு தரப்பு சாட்சியான அ.சா. 4 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | தாலுக்கா | : | கும்முடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | திருவேங்கடம் | தொழில் | : | போஸ்ட் மாஸ்டர்(ஓய்வு) |
| கிராமம் | : | மங்காவரம் | வயது | : | 65 |

( எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் மங்காவரம் கிராமத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் இந்ததிய அஞ்சல் துறையில் போஸ்ட் மேனாக பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். 02.01.2021 ம் தேதி மங்காவரம் பொன்னியம்மன் கோவிலில் அதில் தலா கால் சவரன் எடை கொண்ட இரண்டு குண்டும், அரை சவரன் எடைகொண்ட ஒரு மாங்கல்யமும் திருடு போயிருந்தது. அதற்காக 05.01.2021 தேதியில் சிவா என்பவர் கும்மிடிப்பூண்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்திருந்தார். அந்த புகார் சம்பந்தமாக கும்மிடிப்பூண்டி போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கோவிலில் நகை திருடு போனது தொடர்பாக சிவா சொல்லி தான் எனக்கு தெரியும் என்றாலும் நேரடியாக எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். யார் கோவிலில் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் வா க்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/- சரவணன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R

Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.11.03 12:58:06 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி